வெ.எண்: 08/ மார்ச் /2020 நாள்: 03.03.2020

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள மீன்வளத்துறையில் அசூர் மீன்பண்ணையில் காலியாகவுள்ள இரண்டு மீன்வள உதவியாளர் பணியிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

-------------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள மீன்வளத்துறையில் அசூர் மீன்பண்ணையில் காலியாகவுள்ள இரண்டு மீன்வள உதவியாளர் பணியிடங்களை திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமும், பத்திரிக்கை செய்தி மூலமும் இனசுழற்சி அடிப்படையில், ஆதிதிராவிடர் முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர் -மகளிர் ஆதரவற்ற விதவை (SCA Destitute widow) 1 நபரும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் முன்னுரிமை பிரிவினர் (MBC General Priority) பிரிவில் 1 நபரும் நிரப்பப்பட உள்ளது. இவை தொடர்பாக (09.01.2020) அன்று தினத்தந்தி(வெ.ஆ.எண் 16/செ.ம.தொ/2020 திருச்சி) மற்றும் இதர செய்தித்தாள்களில் வெளியான பத்திரிக்கை செய்தி நிர்வாக காரணங்களால் இரத்து செய்யப்படுகிறது.

இப்பணியிடத்திற்கு 01.01.2020 அன்றைய நிலவரப்படி குறைந்த பட்சம் வயது வரம்பு 18 ஆகவும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்க்கு வயது உச்ச வரம்பு 32 மற்றும் ஆதிதிராவிடர் அருந்ததியினர் பிரிவினருக்கு உச்ச வயதுவரம்பு 35 ஆக இருக்க வேண்டும்.

கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள் :

1. தமிழில் எழுத படிக்க மற்றும் பேச தெரிந்திருக்க வேண்டும்.
2. நீச்சல், வலை பின்னுதல், அறுந்த வலைகளை சரி செய்தல் மற்றும் வீச்சு வலை வீசுதல் தெரிந்திருக்க வேண்டும்.
3. மீன்துறையின் கீழ் உள்ள ஏதேனும் ஒரு மீனவர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி மேற்கொண்டமைக்கான சான்றிதழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்காணும் தகுதியுள்ள நபர்கள் 05.03.2020 முதல் 03.04.2020 முடிய உள்ள நாட்களுக்குள் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை மீன்வளத்துணை இயக்குநர் (மண்டலம்), திருச்சி, 17/2 சமது பள்ளித்தெரு, காஜாநகர், திருச்சிராப்பள்ளி – 620020 அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது அஞ்சல் வழியாகவோ, விண்ணப்பம் அளித்திடுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**